சிறப்பான முறையில் படிப்பதற்கு திருவெண்காடு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற ஆதிதிராவிட மாணவர்களுக்காக, ஆதி திராவிடர் மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படும் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய இதய தெய் வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசால், இந்த ஆதிதிராவிட மாணவர்களுக்கு என்று மாணவர் விடுதி திறப்ப தற்கு மாண்புமிகு அமைச்சா அவர்கள ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 439, திரு.எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. கே. எஸ். துரைமுருகன் கேட்கிறார். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

439—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு பயிற்சியின்போது மிகப் பிற்பட் டோருக்கு அளிக்கப்படும் உதவித் தொகை.

*11219— திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான பயிற்சிப் பெறும்போது மிகப்பிற்படுத்தப்பட்ட இனத்தவருக்கு அளிக்கப் படும் அரசு உதவித் தொகை ரூ. 250—ஐ மேலும் உயர்த்தித்தர வேண்டுமென அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11–05

திரு. கே. எஸ். துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே, இன்றைய சூழ்நிலையில் ''ஆல் இன்டியா சர்வீஸஸ்'' என்று சொல்லக்கூடிய அகில இந்தியப் பணிகளில் தமிழகத்தி

னுடைய மாணவர்களுடைய தேர்வு விகிதம் குறைந்து வந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் புரட்சித் தலைவியின் ஆட்சியில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிக அளவில் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குரிய வகையில் ஆவன செய்ய வேண்டும். தறசமயம் சென்னையில் மட்டும் பயிற்சி மையம் இருக்கிறது. அதுபோன்ற பயிற்சி மையம் கோவை, மதுரை போன்ற பெருநகரங்களிலும் ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பதையும், அதேபோல் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கி அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்தியப் பணிகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம் கிட்டத்தட்ட பல ஆண்டுகளாக வருட வருமானம் என்ற வரம்பு 24,000 ரூபாய் என்று இருந்தது. அப்படி இருந்ததை இன்றைக்கு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வருமான வரம்பே இல்லாத வகையில், அதை நீக்கியதன் காரணமாக இன்றைக்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் கடந்த காலத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வரலாற்றிலேயே இல்லாத வகையில் ஒருவர் ஐ.ஏ.எஸ்.-க்கும், சென்ட்ரல் கமிஷன் தேர்வுக்கும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். அதோடு மட்டுமல்லாமல் 5 பேர்கள் இன்றைக்கு நேர்காணலுக்காக டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். இதுவே ஒரு மிகப் பெரிய வெற்றியாகும். இந்த வருமான வரம்பை நீக்கியதன் காரணமாக இன்னும் அதிகமான அளவுக்கு தேர்ச்சி பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு கடுமையான நிதி நெருக்கடி காரணமாக இந்த உணவுத் தொகையைக் கூட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லை. அந்த வகையில் "ஸ்பெஷல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்" என்பதை மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துகிற எண்ணம் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு அதிகமான உதவித்தொகை வழங்க இயலாது என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்தியாவிலேயே இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். போன்ற அகில இந்தியத் தேர்வுகளில் தனியார்

1993 ஏப்ரல் 22]

நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சி பெற்றவர்கள்தான் அதிகமாக வெற்றி பெற்று வருகிறார்கள். ராவ் சென்டர் மற்றும் சென்னையிலே கேத்தலிக் சென்டர் போன்ற உயர்ந்த பயிற்சி அளிக்கிற நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் அதிகமாக வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு படிப்பதற்கான எல்லா வசதிகளையும் இந்த தனியார் பயிற்சி நிறுவனங்கள் அளித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இந்தமாதிரியான வசதிகள் இல்லாத காரணத்தால், அதாவது அவர்களுக்கு படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால் அவர்கள் இந்த வெற்றி வாய்ப்பை இழக்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்த உயர்ந்த பயிற்சி நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சிக்கு இணையாக அவர்களுக்கும் படிக்கின்ற அந்த 'அட்மாஸ்ஃபியர்' ஏற்படுத்திக்கொடுக்கிற அளவுக்கு ஒரு பயிற்சி மையத்தை இங்கே ஏற்படுத்தித் தருவார்களா என்றும், அதிக உதவித் தொகை கொடுக்க முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் தருவதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிகமான அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உள்ள நிதி நெருக்கடி காரணமாகத்தான் உயர்த்தலாம் என்ற எண்ணம் இருந்தும் கூட உயர்த்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் கருத்திற்கேற்ப அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண் 440, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

440—

<u>தமிழ்ப்புத்தாண்டுக்கு கதர் துணிகளுக்கு சிறப்பு தள்ளுபடி</u>

<u>*12510—திரு. ஆ. சுப்புரத்தினம்</u>:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கதர் துணிகளுக்கு சிறப்புத் தள்ளுபடி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS